Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 47/2026** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **அஞ்சலி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

02.06.2026

முதல் விசாரணை:

1. நான் மறவர் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன்.அ.சா.1 சந்தானம் எனது மருமகன் ஆவார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எனது மருமகனுடன் நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்தேன். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது, என் முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. **(பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. **(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 08.06.2025 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த பரமசிவமும் பரமசிவத்தின் வீட்டின் முன்பு பேசி கொண்டிருந்தபோது அங்கு வந்த ரெட்டியபட்டி காவல் நிலைய குற்ற

எண். 69/2025 வழக்கில் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும் பரமசிவமும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 47/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **தங்கபொன்னு** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

02.06.2026

முதல் விசாரணை:

1. நான் மறவர் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சந்தானம் எனது கணவர் ஆவார். ஒரு வருடத்திற்கு முன்பு எங்கள் வீட்டில் கிரகபிரவேசம் வைத்திருந்த போது, இரவு 01.00 மணியளவில் யாரோ ஒரு நபர் எங்கள் வீட்டிற்குள் சுவர் ஏறி குதிப்பது போல் தோன்றியது. அவர் பார்ப்பதற்கு இவ்வழக்கின் எதிரி போல் எனக்கு தெரிந்தார். அதனால் எதிரி மீது சந்தேகத்தில் எனது கணவர் புகார் கொடுத்துவிட்டார். பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டதில், எதிரி அன்றைய தினம் எங்களது வீட்டிற்கு வரவில்லை என்று தெரிந்து கொண்டோம். தற்போது எதிரிக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சனையும்இல்லை. நாங்கள் சமாதானமாகத் தான் இருக்கிறோம். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நாங்கள் தற்போது தான் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், 07.06.2025ம் தேதி இரவு சுமார் 12.40 மணிக்கு நானும், எனது கணவர்

அசா.1 மற்றும் எனது மகன், மகள் ஆகியோர்கள் எங்கள் வீட்டி மாடியில் தூங்குவதற்காக சென்று படுத்திருந்தபோது எதிரி ராஜமோகன் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் கட்டி கொண்டிருக்கும் வீட்டின் மாடி வழியாக எங்கள் வீட்டு மாடியில் குதித்ததை பார்த்த நான் சத்தம் போடவும், எதிரி மாடியில் இருந்து குதித்து தப்பி ஓடிவிட்டதாகவும், எனது கணவர் அசா.1 துரத்தி சென்றதாகவும், பின்னர் திரும்பி வந்த எனது கணவரிடம் கேட்டபோது அசா.1 எதிரி வீட்டிற்கு சென்று மதுபோதையில் இருந்த எதிரியிடம் எங்கள் வீட்டின் மாடியில் ஏன் குதித்தாய் என்று கேட்டதற்கு எதிரி எனது கணவரை அசிங்கமாக திட்டியதாக கூறியதாகவும், எதிரி எங்கள் வீட்டின் மாடியில் அத்து மீறி குதித்ததால் நானும் குழந்தைகளும் பயத்தில் இருந்ததாகவும், எனவே மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி எனது கணவர் அசா.1 08.06.2026 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு ரெட்டியபட்டி போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும் போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 47/2026** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **சந்தானம்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the
day of 2026

---

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

02.06.2026

முதல் விசாரணை:

1. நான் மறவர் பெருங்குடியில் குடியிருந்து, ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான ராஜ்மோகன் எனது பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார். ஒரு வருடத்திற்கு முன்பு எங்கள் வீட்டில் கிரகபிரவேசம் வைத்திருந்த போது, இரவு 01.00 மணியளவில் யாரோ ஒரு நபர் எங்கள் வீட்டிற்குள் சுவர் ஏறி குதிப்பது போல் தோன்றியது. அவர் பார்ப்பதற்கு இவ்வழக்கின் எதிரி போல் எனக்கு தெரிந்தார். அதனால் அவர் மீது சந்தேகத்தில் புகார் கொடுத்துவிட்டேன். பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டதில், எதிரி அன்றைய தினம் எனது வீட்டிற்கு வரவில்லை என்று தெரிந்து கொண்டேன். தற்போது எதிரிக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும்இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சந்தேகப்பட்டு மேற்படி புகாரை கொடுத்துவிட்டேன். புகாரில் கூறியுள்ள வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தற்போது தான் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், 07.06.2025ம் தேதி இரவு சுமார் 12.40 மணிக்கு நானும், எனது மனைவி மற்றும் எனது மகன், மகள் ஆகியோர்கள் எங்கள் வீட்டி மாடியில் தூங்குவதற்காக சென்று படுத்திருந்தபோது எதிரி ராஜமோகன் எனது வீட்டிற்கு பக்கத்தில் கட்டி கொண்டிருக்கும் வீட்டின் மாடி வழியாக எங்கள் வீட்டு மாடியில் குதித்ததை பார்த்த எனது மனைவி சத்தம் போடவும், எதிரி மாடியில் குதித்து தப்பி ஓடிவிட்டதாகவும், நான் துரத்தி சென்று எதிரி வீட்டிற்கு சென்று மதுபோதையில் இருந்த எதிரியிடம் என் வீட்டின் மாடியில் ஏன் குதித்தாய் என்று கேட்டதற்கு எதிரி என்னை அசிங்கமாக திட்டியதாகவும், எதிரி என் வீட்டின் மாடியில் அத்து மீறி குதித்ததால் எனது மனைவி, குழந்தைகள் பயத்தில் இருந்ததாகவும், எனவே மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி 08.06.2026ம் தேதி மதியம் 01.00 மணிக்கு ரெட்டியபட்டி போலீசாரிடம் புகார் மனு கொடுத்து போலீசாரிடம் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**